செய்தி வெளியீடு எண்:355 நாள்: 06.07.2009

# நான்கு வெவ்வேறு சம்பவங்களில் உயிரிழந்த 9 பேரின் குடும்பங்களுக்கு மொத்தம் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

**சென்னை புதுவண்ணாரப்பேட்டையில் உள்ள தனியார் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் எட்டாம் வகுப்பு மாணவன் கார்த்திக் என்பவர் அப்பள்ளி விளையாட்டுத் திடலில் அமைந்துள்ள நடமாடும் கோல் போஸ்டில் ஏறி விளையாடிக் கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக மாணவர் கார்த்திக் மீது கோல் போஸ்ட் விழுந்ததனால் தலையில் அடிபட்டு மருத்துவமனை செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார்.**

**தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம் பையர்நாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள ஓர் ஏரியில் குளிக்கச் சென்ற பள்ளி மாணவிகளாகிய முனியன் என்பவரின் மகள் நித்யா, மாரியப்பன் என்பவரின் மகள் மகேஸ்வரி, நாகராஜ் என்பவரின் மகள் பிரியா, ஏழுமலை என்பவரின் மகள் பிரியா ஆகிய நான்கு பேரும் ஏரி நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.**

**புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஒன்றியத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் 8ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் சாத்தையா என்ற சங்கர் பள்ளி முடிந்து வீட்டிற்குச் சைக்கிளில் சென்றபோது தனியார் பேருந்து மோதி ஏற்பட்ட விபத்தில் அம்மாணவர் உயிரிழந்துள்ளார்.**

**கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் வசித்த என்.சீனிவாசன், அவரது மனைவி ரதி, மகன் சுரேஷ்குமார் ஆகிய மூவரும் புளியம்பட்டியில் ஒரு திருமண நிகழ்ச்சிக்குச்சென்று இரு சக்கர வாகனத்தில் வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தபோது எதிரில் வந்த தனியார் பேருந்து மோதி ஏற்பட்ட விபத்தில் மூவரும் உயிரிழந்துள்ளனர்.**

**இந்த நான்கு வெவ்வேறு சம்பவங்களிலும் 9 பேர் உயிரிழந்த விவரம் தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளதுடன், அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் அவர்களின் குடும்பத்தார்க்கு மொத்தம் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (6.7.2009) ஆணையிட்டுள்ளார்.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9